**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – கல்வி – பள்ளிகள் மற்றும் விடுதிகள் – திருவள்ளூர், கடலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இயங்கி வரும் அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள், கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறைக் கட்டடம், விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகிய பணிகளை ரூ. 149.27 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடபப்டுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை **(நிலை)** எண்: 2

**நாள் : 08.01.2019**
விளம்பி வருடம்
மார்கழி திங்கள் 24–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டவை:–

1. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க.4/23581/2016–1, நாள். 18.07.2018.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க.4/23581/2016–2, நாள். 18.07.2018.
3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க.4/44773/ 2006, நாள். 31.07.2018.
4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க.4/8510/ 2018, நாள். 31.07.2018.
5. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க.4/8510/ 2018, நாள். 01.08.2018.
6. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க.4/14209/ 2018, நாள். 01.08.2018.

-----

**ஆணை:**

மேலே ஒன்று முதல் ஆறு வரை படிக்கப்பட்ட கடிதங்களில், திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கி வரும் 10 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணியும், வடகரை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் விளையாட்டு மைதான மேம்பாட்டுப் பணி மற்றும் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் சேதமடைந்துள்ளதால் புதிய சுற்றுச்சுவர் அமைக்கவும், கடலூர் மாவட்டம், கழுதூர் ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பறைக் கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல், கடலூர் மாவட்டம், சிறுநெசலூர் ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளிக்கு இரு வகுப்பறைக் கட்டடம் கட்டுதல், கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திப்பள்ளம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதலாக இரு வகுப்பறைக் கட்டடம் மற்றும் அத்திப்பள்ளம் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகிய பணிகளை ரூ.177.06 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியிருந்தார்.

(த.பி.பா.)

2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை, அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை ரூ.1,49,27,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து இருபத்து ஏழாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

| வ.எண். | கருத்துரு | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | (அ) அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வடகரை, விளையாட்டு மைதானம் மண் அடித்து தளம் அமைக்க | ரூ.20.00 இலட்சம் |
| | (ஆ) அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளி வடகரை, விளையாட்டு மைதானம் மண் அடித்து தளம் அமைக்க | ரூ.5.00 இலட்சம் |
| | (இ) அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வடகரை, மின் கம்பிகள், 10 மின்கம்பங்கள் மாற்றியமைத்தல் | ரூ.1.50 இலட்சம் |
| | (ஈ) அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, வடகரை சுற்றுச்சுவர் மேம்படுத்துதல், பாதுகாப்பு கம்பிவளையம் அமைத்தல், முகப்பு வாயில் கேட் மாற்றியமைத்தல் | ரூ.14.50 இலட்சம் |
| 2. | கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், கழுதூர் ஆதிதிராவிடர் நல பள்ளிக்கு கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் | ரூ.20.93 இலட்சம் |
| 3. | கடலூர் மாவட்டம், விருதாச்சலம் வட்டம், சிறு நெசலூர் அரசு ஆதிதிராவிடர் நல பள்ளிக்கு 2 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல் | ரூ.33.67 இலட்சம் |
| 4. | கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திப்பள்ளம், அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல் | ரூ.24.11 இலட்சம் |
| 5. | திருவள்ளூர் மாவட்ட 10 ஆதிதிராவிடர் நல பள்ளிகளின் பழுதடைந்த கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணி | ரூ.29.56 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.149.27 இலட்சம்** |

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>i) வரிசை எண். 1– [ஒன்றில் (அ), (ஆ) மற்றும் (இ) மட்டும்] முதல் 4 வரை ரூ.105.21 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிகள்</u>

"4225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள், JB – ஆதிதிராவிடர் நல பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்–16 பெரும் பணிகள் (த.தொ.கு .4225 01 277 JB 1601)"

(த.பி. பா.)

ii) வரிசை எண். 5 இல் ரூ.29.56 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிகள்

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி மாநிலச் செலவினங்கள் – AA – பள்ளிக் கல்வி – 18 பராமரிப்பு – 01 குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு .2225 01 277 AA 1811 )"

iii) வரிசை எண். 1இல்(ஈ) இல் ரூ.14.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிகள்

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி மாநிலச் செலவினங்கள் – AE – மாணவர் இல்லங்கள் – 18 பராமரிப்பு – 01 குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு .2225 01 277 AE 1813 )"

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கட்டுமானப் பணிகள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று, தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் பெயரிலான தன்பெயர் வைப்புக் கணக்கில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:-

" K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443–00– உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் "
(த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)
(த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

5. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை தாட்கோ, மேலாண்மை இயக்குநருடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரப்பட்டவாறு, கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திப்பள்ளம், அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டும் பணியினை நபார்டு திட்டத்தின் மூலம் மேற்கொள்ள ஏதுவாக உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(த.பி.பா.)

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 64543/ஆதி(ம)பந/2018, நாள் 04.01.2019–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்:**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில முதன்மைக் கணக்காயர் (கணக்கு மற்றும் பணவரவு),
361, அண்ணா சாலை, சென்னை – 600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர், கடலூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருவள்ளூர்,
கடலூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர், கடலூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை –600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின்
முதுநிலை தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நிதி (ஆதி(ம)பந)த் துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு.1/ஆதிந.4/ஆதிந.5/ஆதிந.7) துறை,
சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்
8.1.19